# தமிழரசு சரணாகதி அடைய

(1-ம் பக்க தொடர்ச்சி)

தமிழரசு கட்சியினருக்கு மிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தை நாசமாக்கியது திரு டட்லி டயலை பண்டாரநாயக்காவும், திரு.வைமயி, வி பெரினண்டோவும்தான், எப்படியான நோக்கத்துடன் ஒப்பந்தம் உருவாக்கப்பட்டதோ அதற்கு-அந்த ஒப்பந்தத்துக்கு அவர்களிருவரும் நம்பிக்கைத் துரோகிகளாக நடந்து விட்டனர். கேவலம்! தேர்தல் முடிவுகள் வெளியானதைத் தொடர்ந்து பழைய அரசாங்க கட்சியினர் நமது ஆதரவைப் பெறுவதில் தீவிர முயற்சி எடுத்தனர்,

அரசாங்க கட்சியினர்: பெயர்களை வெளியிடவேண்டும்!

அமிர்தலிங்கம்: திரு மைத்திரிபால சேனநாயக்கா, திரு பதியூதீன் மஹ்மூத், திரு சம்னி குணவர்த்தன, திரு அனில் முனசிங்கா ஆகிய நால்வரும் எங்களைச் சந்தித்து ஆதரவு கேட்டனர்.

ஒரு குரல்: பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா எங்கே?

அமிர்தலிங்கம்: அரசாங்கம் அமைக்கப்பட்டுவிடுமென்றநம்பிக்கையில் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா மூழ்கியிருந்தார், அரசாங்கம் நிறுவும் முயற்சி பெரிய கட்டத்தில் மட்டும் நடைபெறவில்லை. வயதில் குறைந்தவர்களுடன் கூட இதுசம்பந்தமான பேச்சுகள் நடைபெற்றன. திருவாளர்கள் தர்மலிங்கம், நவரத்தினம், துரைரத்தினம் மற்றும் என்னுடன்கூட பேச்சுகள் நடத்தினர். இந்த நாடகம் பார்லிமெண்ட் அறையில் தான் நடைபெற்றது.

### தமிழ் தோசை

அரசியல் பசி ஏற்பட்டதும் இப்பொழுது தோசை வடை என்று எம்மை இழிவுபடுத்தும் எதிர்க்கட்சியினர் தங்களது பசியை ஆற்றுவதற்கு அப்பொழுது தமிழ் தோசைகளைத்தான் நாடியிருந்தனர்!

அரசாங்கம் நிறுவுவது குறித்துப் பேச்சுகள் நடத்தச் சிலர் வந்திருப்பதாக நான் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்திடம் சொன்னேன். 'எதை இழந்தாலும் தமிழர்களின் சுயமரியாதையை இழக்கத் தயாராயில்லை என்று பதிலளிக்குமாறு' திரு. செல்வநாயகம் என்னிடம் தெரிவித்திருந்தார்.

தேசிய அரசாங்கத்தில் சேர்ந்து விட்டோம் என்று இப்பொழுது சிலர் கொக்கரிக்கின்றனர், அரசாங்கத்துடன் ஏன் சேர்ந்தோம்? சர்வாதிகாரம் இந்த நாட்டில் ஏற்படுவதைதடுக்கவே தேசிய அரசாங்கத்தில்சேர்ந்தோம் சர்வாதிகாரத்தை விரும்பியதேசத்துரோகிகள் இந்த நாட்டை சீனாவுக்கு விற்க முயன்றனர். சர்வாதிகாரம் ஏற்பட்டு இந்த நாடு அழிந்துவிடும் என்பதற்காகவே நாம் அரசாங்கத்தில் சேர்ந்தோம், என்றும் திரு. அமிர்தலிங்கம், தெரிவித்தார்.

## இன்று

அன்னுகம் கதிரமலை சிவன் கோவில் கொடியேற்றம் தொடர்ந்து பத்து தினங்களுக்கு திருவிழா நடைபெறும், பிரம்மஸ்ரீ சோ. நடராஜக்குருக்கள் பிரதம குருவாக வைபவத்தை நடத்துவார்.

## சமய சமரச கூட்டம்

யாழ்ப்பாணம், வியாழன் புதுவருடதினத்தைக்கொண்டாடும் நோக்கத்துடனும் சமய ஐக்கியத்தை வளர்க்கும்நோக்கத்துடனும் இன்று மாலை 5 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் திரு. ரி. மூத்துச்சாமிப்பிள்ளை தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும். அக்கூட்டத்தில் பிரதம பேச்சாளர்களாக திருவாளர்கள் வி. எப். குணரத்தின, கே நேசையா, எம் எம் யூசுப், சேர் கந்தையா வைத்தியநாதன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்கள்.

நாளை அவர் தொடர்ந்து பேசுவார்.

### சிவசிதம்பரம் பேச்சு

வவுனியா எம்,பி, திரு ரி, சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது'

ஜனநாயகம் காப்பாற்றப்படவேண்டுமென்பதற்காகவே நாம் தேசிய அர்சாங்கத்தில் சேர்ந்தோம். தமிழுக்கு பல உரிமைகளும் அந்தஸ்தும் தருவோம் என்று சொன்னவர்கள் இப்பொழுது எதிர்க்கட்சியில் இருக்கின்றனர், வகுப்புவாதத்துக்கு வித்திட்டது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிதான்,

குருவளிக்கு வந்த வெளிநாட்டு நன்கொடைகள் தேர்தல் பிரசாரத்துக்காக உபயோகிக்கப் பட்டது வெட்கப்பட வேண்டிய செயலாகும். எம்மை இப்பொழுது வடை தோசை என்று ஏளனம் செய்யும் எதிர்க்கட்சியினர் வடக்கு கிழக்குக்கு வந்தால் என்ன நடக்குமென்பதை அவர்களே அறிந்து கொள்வார்கள்'

## உதவி மந்திரி

(1-ம் பக்க தொடர்ச்சி)

கூறினர்கள், ஆனால் மக்களின் -நாட்டின் நலனைக் கருதி நாம் சேவை செல்வதால் மீண்டும் பதவிக்கு வந்துள்ளோம் நாட்டிலுள்ள சகல இன, மத சாதி மக்களிடையேயும் இப்பொழுதுள்ள ஒற்றுமை போலஸ்று கடந்த காலங்களில் எப்பொழுதாவது ஒற்றுமையும் நல்லெண்ணமும் நிலவவில்லை. வேலையில்லா ஒழித்துக்கட்டி வாழ்க்கைச் செலவைக குறைக்க எதிர்க்கட்சியினரும் ஒத்துழைப்பு தருவார்களென்றே நம்புகிறேன்.

## சபையில் நடந்தது

(1ம்-பக்க தொடர்ச்சி)

கும் அல்லவா? ஏமாற்றுக் கோஷ்டித் தலைவர் என்று அமிர்தலிங்கம் கூறியது பீலிக்ஸுக்கு பொறுக்க முடியவில்லை அக்கட்டத்தில் தமிழரசு தமிழ் காங்கிரஸ் எம் பீக்கள் ஒன்றாகத் திரண்டு உறுமல் போட்டு பீலிக்ஸை அவரது ஆசனத்தில் அமரச்செய்து விட்டனர்.

●

வடை, தோசை என்று ஏளனம் செய்தவர்களுக்கு வவுனியா சிவசிதம்பரம் அபாய அறிவித்தல் கொடுத்தார். ஒன்பது வருடங்கள் பொறுத்த எமக்கு இனியும் பொறுக்க முடியுமா என்று ஒரு மணி நேரமாக கன்னித்தமிழில் பேசி எதிர்க்கட்சியினரை சித்திரவதை செய்தார். சிவசிதம்பரம் பேசும் பொழுது குறுக்கிட்டவர்களை, இராசமாணிக்கம், துரைரத்தினம், இராசதுரை ஆகியோரர் விட்டுவைக்கவில்லை. தமிழ் காங்கிரஸுக்கு தமிழரசு காவல், தமிழரசுக்கு தமிழ் காங்கிரஸ் காவல், ... எதிர்பார்த்த நல்ல சகுனத்

### வடபகுதி அசைஸ் விசாரணை

# சிகரட்டைவாங்கியதில் ஏற்பட்ட தகராறு

## சரசாலை கொலை வழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், வியாழன் "இறந்தவரை 2-ம் எதிரி உலக்கையால் மூன்று தடவை அடித்தபோது நான் குறுக்கிட்டு ஏன் அவரை அடிக்கிறதாகக் கேட்டேன். உடனே 2-ம் எதிரி எனக்கும் அடித்தார். நான் நிலத்தில் விழுந்துவிட்டேன், அதன்பின் 1-ம் எதிரியும் கொட்டனால் இறந்தவரை அடித்தார். 2-ம் எதிரி எனக்கு அடித்தபோது எனது நெஞ்சிலும், தோளிலும் கையிலும் காயம்ஏற்பட்டது."

சரசாலைக் கொலை வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ்நீதிமன்றத்தில் நீதியரசர் திரு: வி. மாணிக்கவாசகர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது முருகன் கிருஷ்ணன் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கில் 1964-ம் ஆண்டு மே மாதம் 19-ம் திகதி சரசாலையில் கணபதிராசன் என்பவரை, நடராசா, கணபதிப்பிள்ளை ஆகியோர் கொலைசெய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. கே.வி. எஸ், சண்முகநாதன், திரு. ரி, தம்பிரத்தினம், திரு. ஆர், ஜே. செல்வரத்தினம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் திரு. ரி. எஸ, ஆனந்தகுமாரசாமி நியமிக்கப்பட்டிருந்தார்.

கிருஷ்ணன் சாட்சியமளிக்கையில் தொடர்ந்து கூறியதாவது:- காலஞ்சென்றவர் எனது நண்பன் 1-ம், 2-ம் எதிரிகளை எனக்குத் தெரியும், சம்பவம் நடந்ததினம் எனக்கு ஞாபகமிருக்கிறது. அன்று காலை 10 மணிக்கு இறந்தவரைச் சந்தித்தேன். சரசாலைக்கு அவரின் தகப்பனுர் வீட்டுக்குச் சென்றேம், அதன்பின் இறந்தவரின் சகோதரி வீட்டிற்குப்போனேம். சின்னத்தம்பி வீட்டுக்கிணற்றில இறந்தவர் குளித்தார். இறந்தவர் சாவகச்சேரிக்குப் போகவிரும்பியதால் அவருடன் சென்றேன். வழியில் ஒரு கடைக்குச் சென்றேம், அந்தக் கடை 1-ம் எதிரிக்குச் சொந்தமானது இறந்தவர் கடைக்குள் செல்ல நான் றோட்டில் நின்றேன், இறந்தவர் கடையில் ஒரு பைக்கற் சிகரட் வாங்கினர் அதற்குஒரு ரூபாய் கொடுத்தார். நான் ஒரு சிகரட் கேட்டேன் அவர் சிகரட் பைக்கற்றை தவறவிட்டுவிட்டதாகக் கூறி மீண்டும் ஒருபைக்கற் சிகரட் வாங்கிவந்தார். இரண்டாவது பைக்கற் சிகரட்டிற்கு இறந்தவர் காசு கொடுத்ததை நான் காணவில்லை 1-ம் எதிரி இறந்தவரிடம் காசுதரும்படி கேட்டார். இறந்தவர் ஐந்து ரூபா கொடுத்ததாகவும் மீதிக்காசை தரும்படியும் முதல் எதிரியைக் கேட்டார், அதற்கு முதல் எதிரி சிகரட் பைக்கற்றுக்கு காசு தரவில்லை என்றும், பிறகு தரும்படியும் கூறினர். இறந்தவர் உடனே காசு தந்ததாகவும் மிச்சத்தைத் தரும்படியும் கூறி முதல் எதிரியைக் கையால் அடித்தார். அந்த அடி எங்கு விழுந்தது என்று எனக்குத் தெரியாது. அடி விழுந்ததும் முதலாம் எதிரி ஓடிவிட்டார். நான் இறந்தவரிடம் "வா போவோம்" என்று கேட்டேன். தான் மிச்சக் காசு வாங்கியபின் தான் வருவதாகக் கூறினர், இதன்பின் இரண்டாம் எதிரி வந்து என்னடா கடையில் வந்துசண்டை பிடிக்கிருய் என்று இறந்தவரை உலக்கையால் அடித்தார். அடி விழுந்தபோது இறந்தவர் கடைவாசலில் இருந்தார், சம்பவம் நடந்த

(2-ம் பக்கம் பார்க்க)

### காங்கேசன்துறை

# ரயில்வே கடவைகளில் பாதுகாப்புத் தேவை

## யாழ். மாவட்ட இணைப்பு கமிட்டி கூட்டத்தில் பிரேரணை

மாவிட்டபுரம், வியா. காங்கேசன்துறை பட்டின சபை எல்லைக்குள்ளிருக்கும் முதலாம், மூன்றும் வட்டாரங்களில் பாதுகாப்புடன் கூடிய மூன்று ரயில்வே கடவைகளை நிறுவித் தரும்படி அரசாங்கத்தை கேட்டுக் கொள்ளும் பிரேரணையொன்று அடுத்தமாதம் நடுப்பகுதியில் நடைபெறவிருக்கும் யாழ்ப்பாணம் மாவட்ட இணைப்புக் கமிட்டிக் கூட்டத்தில் கொண்டு வரப்பட்டவிருக்கிறது.

இதுசம்பந்தமான பிரேரணையொன்றைக் கொணடுவர காங்கேசன்துறை பட்டின சபைத் தலைவர் திரு எஸ். கிருபாமூர்த்தி முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்,

காங்கேசன்துறை பட்டின சபை எல்லைக்குள்ளிருக்கும் நடேஸ்வராக்கல்லூரி வீதி, மூன்றும் குறுக்குத்தெரு, சந்தை வீதி ஆகிய இடங்களில் ரயில்வேக கடவைகளில் பாதுகாப்புக்'கேற்று'களை அல்லது ஒளிச் சைகைகாட்டிகளை அமைக்கவேண்டுமென்றும், இந்த இடங்களில் பொதுமக்கள் அதிகமாகப் போக்குவரத்துச் செய்வதால் பாதுகாப்பு நடவடிக்கைகள் காலதாமதமின்றி எடுக்கவேண்டுமென்றும் இந்தக் கடவைகளில் ஏற்கனவே பாரதூரமான சில ரயில்விபத்துகள் நடைபெற்றிருப்பதும் ஒரு காரணமென்றும் திரு. கிருபாமூர்த்தி தமது பிரேரணையில் தெரிவித்துள்ளார்.

# "வடவியட்னும்மீது தொடர்ந்து குண்டு வீசுவோம்

## சீன பயமுறுத்தலை நாங்கள் லட்சியம் செய்யவில்லை" —ரஸ்க்

வாஷிங்டன், ஏப்ரல் 21

வடவியட்னும் மீது தொடர்ந்து குண்டு வீச்சு நடத்தப்படும் என்றும், தென்வியட்னுமில் அமெரிக்கப் படைபலம் மேலும் மேலும் அதிகரிக்கப்படும் என்றும் அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. டீன்ரஸ்க் கூறினர்.

பாலங்களைத் தகர்த்தல், கடல்வழியாக வியட்காங் கொரில்லாக்கள் தென்வியட்னுமில் ஊடுருவுவதைத் தடுத்தல் ஆகிய நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொள்ளும் என்றும் அவர் கூறினர்,

வியட்னுமில் நிபந்தனையற்ற முறையில் அமைதிப் பேச்சுகள் நடத்தவேண்டும் என்ற 17 மண்டல சார்பற்ற நாடுகளின் யோசனைக்கு தாம் இணங்குவதாக பிரெஞ்சு அதிபர் டிகால் அந்நாடுகளுக்கு உத்தியோக பூர்வமாக அறிவித்திருக்கிறர்.

சீனுவின் பயமுறுத்தல் அமெரிக்காவின் வியட்னும் கொள்கையை எவ்விதத்திலும் நசுக்க முடியாது என அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. டீன்ரஸ்க் கூறினர்.

## பாணுவிடை ஐயனர் உற்சவம்

ஊர்காவற்றுறை, வியாழன் பர்வதவர்த்தனி அம்பாள் சமேத இராமலிங்கேஸ்வர சுவாமி என அழைக்கப்படும் பழமை வாய்ந்த புங்குடுதீவு பாணுவிடை ஐயனர் ஆலய உற்சவம் சென்ற சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

## பிரதமரின் நடவடிக்கை

பம்பலப்பிட்டி. புதன் எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் பொலிஸ் அதிகாரிகளினுல் துன்புறுத்தப்பட்டுள்ளார்கள் என்பதுபற்றி தமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட சில விஷயங்களையிட்டு ஒரு விசாரணை நடத்துமாறும் அதற்காக ஒரு பொலிஸ் அதிகாரியைப் பொறுப்பித்துள்ளதாகவும் பிரதம மந்திரி டட்லி சேனநாயக்கா ஜனப்பிரதிநிதிகள் சபையில் தெரிவித்தார்.

தின் அறிகுறி போலும்.

மந்திரி மகமட் இன்று ஒரு ஜோஷ்யராகிவிட்டார், அவரது முதலாவது ஜோஷ்யம்: "ஸ்ரீமா விரைவில் யு என் பி யில் சேருவார்" என்பதே, அந்தப் பேச்சின்போது சபைக்குள் ஸ்ரீமா பிரவேசித்தார், மொகமட்டி பேச்சைக் கேட்டதும் "நோ... நோ" (இல்லை இல்லை) என்று பதிலளித்தார், தற்போதைய மாற்றங்கள் பற்றி மொகமட் கூறியபொழுது, "உங்கள் கட்சியில் சேருவதிலும் பார்க்க நான் அரசியலுக்கே 'குட்பை' கூறிவிட்டு வீட்டுக்கு சென்று விடுவேன்" என்று கூறியது எனது காதிலும் விழுந்தது;

## ஆதரவு

பம்பலப்பிட்டி புதன் தமிழரசுக் கட்சியின் தொழிற்சங்கங்கள் தேசிய அரசாங்கத்தை ஆதரிப்பதென முடிவு செய்துள்ளன. ஹட்டனில் செனட்டர் மாணிக்கம் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது. மேதினம் கொண்டாடுதற்காக எல்லா தமிழரசு கட்சி பாராளுமன்ற அங்கத்வர்களையும் அனுப்புவதென்றும் அக்கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது.

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை

காரைநகரையும் உடுவிலையும் சேர்ந்த இளைப்பாறிய தலைமை ஆசிரியர் முருகேசு வேலுப்பிள்ளை காலமாகிவிட்டார. இவர் இளைப்பாறிய ஆசிரியை ராசம்மாவின் அன்புக் கணவரும், மொறட்டுவ சென்ற், செபஸ்தியன் கல்லூரி ஆசிரியர் சச்சிதானந்தம், ஊர்காவற்றுறை 'லிற்றில் பிளவர் கொன்வன்ற்' ஆசிரியை சாரதாதேவி கதிர்காமநாதன், யாழ்ப்பாணக்கல்லூரி மாணவி சகுணதேவி சற்குணனந்தன், ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவி சுசீலாதேவி ஆகியோரின் அன்புத்தந்தையும, ஊர்காவற்றுறை சண்முகநாதமகா வித்தியாசாலை ஆசிரியர் கதிர்காமநாதன், பௌத்த சர்வகலாசாலைக்கல்லூரி ஆசிரியை பத்மாவதி சச்சிதானந்தன் ஆகியோரின் அன்பு மாமனுருமாவர். அன்னரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்கு கல்மதி 1ம் கட்டை உடுவிலிலிருந்து பூவடை மயானத்திற்கு இன்று வியாழக்கிழமை மாலை 3 மணியளவில் எடுத்துச்செல்லப் படும். 77

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org